2024
மாச்சு

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## கட்டடவாக்கம்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (கொ.மு.சு - கட்டடவாக்கம்), 55.9 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்திருந்த மொத்த நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு மாச்சில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.** நடுநிலையான அடிப்படை அளவிற்கு மேல் இச்சுட்டெண் காணப்படுகின்ற தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாக இது விளங்கி, கட்டடவாக்க நடவடிக்கைகளில் நிலையான மேம்படுதலைக் குறித்துக்காட்டுகின்றது.

புதிய கட்டளைகள், மாதத்திற்கு மாதம் அடிப்படையில் மெதுவான வேகத்தில் மாச்சில் அதிகரித்தன. விலைக்குறிப்பீடு சமர்ப்பிப்பதற்கு கருத்திட்டங்கள் கிடைக்கப்பெறுகின்றன இருந்தும், விலையிடலில் கடுமையான போட்டி நிலவுகின்றது என அநேகமான பதிலிறுப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர். அனுபவம்பெற்ற ஊழியர்களின் தொடர்ச்சியான புரள்வு மற்றும் எச்சரிக்கைமிக்க ஊழியர் ஆட்சேர்ப்பு என்பவற்றின் பின்னணியில் தொழில்நிலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. செயற்பாட்டு மட்டங்களில் அதிகரிப்பிற்குச் சமாந்தரமாக கொள்வனவுகளின் அளவும் அதிகரித்தன. மேலும், சில வகையான கட்டடவாக்கப் பொருட்களின் விலை மட்டங்கள் மாதகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை மாச்சில் நிரம்பலர் விநியோக நேரம் முன்னைய மாதத்தினைப் போன்று அதே வீதத்தில் நீட்சியடைந்தது.

**கொமுசு தொகுப்பு: கட்டடவாக்க அளவீடு**

| மாறி | பெப். 2024 | மாச். 2024 | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)** | **57.1** | **55.9** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 58.6 | 51.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 45.7 | 44.1 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 58.6 | 55.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 52.9 | 52.9 | = | நீட்சியடைகின்றது, அதே வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கட்டடவாக்க நடவடிக்கைகள் அடுத்த மூன்று மாதங்களுக்கும் தற்போதைய மட்டத்திலேயே காணப்படுமென அநேகமான நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றனர்.

**கொமுசு**
**கட்டடவாக்கம்**
**மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**
**55.9**
**2024 மாச்சு**

கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்




### உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தொகுப்பு - கட்டடவாக்கம்

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| யூரோ வலயம் | சீர்குலைந்துள்ளது, உயர்வான வீதத்தில் |
| பிரான்ஸ் | சீர்குலைந்துள்ளது, உயர்வான வீதத்தில் |
| ஜேர்மனி | சீர்குலைந்துள்ளது, உயர்வான வீதத்தில் |
| அயர்லாந்து | சீர்குலைவிலிருந்து மேம்பட்டுள்ளது |
| இத்தாலி | மேம்பட்டுள்ளது, அதே வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | சீர்குலைவிலிருந்து மேம்பட்டுள்ளது |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 ஏப்பிறல் 30 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள்* (spglobal.com))

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**முறையியல்**
சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.
கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**
மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் அளவு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.